# MADURAI KAMARAJ UNIVERSITY

Palkalai Nagar, Madurai, Tamil Nadu, India,

## Sri Sathguru Sangeetha Vidyalayam
## College of Music and Research Centre

(Accredited with B+ Grade by NAAC)
15A, Gokhale Road, Tallakulam, Madurai-2.

**Mr.D. Suresh**
Research Scholar
**(Registration No.F9461)**

**Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music and Research Centre**

will defend his **Ph.D Thesis** through ONLINE (GOOGLE MEET) Viva - Voce Examination on 04.03.2022 at 10:15 AM (IST)

## Title of the Thesis

**அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டிய தொடர்பும்**

**Research Supervisor and Convener**

**Dr.V.BALA, M.Music., Ph.D.,**
***Principal – Retd.***
**Sri Sathguru Sangeetha Vidyalayam**
College of Music and Research Centre,
Madurai-625002.

**External Examiner**

**Dr.Padma Narasimhachari,**
***Professor***
Department of Performing Arts
Sri Venkateswara University,
Tirupati.

Link to join the Viva Voce Session
http://meet.google.com/bjp-zzvo-ayf

Faculty members, Research Scholars and Students are cordially Invited to take part in the online Viva Voce Session

# SRI SATHGURU SANGEETHA VIDYALAYAM

(College of Music and Research Centre)

## TECHNICAL INFORMATION

- We will join the live session through Google Meet Platform.
- For those of you who would access the meet with Google Chrome please use the link https://meet.google.com/bjp-zzvo-ayf
- Those who would use mobile devices, install Google Meet from the play store and enter the following Meeting ID (bjp-zzvo-ayf) when prompted.
- Session will start at (11.00AM (IST) However, it is advised to join 15 minutes earlier to avoid any technical glitches.

## GENERAL INSTRUCTIONS

- Please leave your Name and the name of the Institution in the Live chat section during the session.
- Kindly make sure that you have MUTED your microphones turned off your VIDEO during the session.
- Please do not use Screen Sharing option at any point of time of the session.
- Please avoid unnecessary interference during the presentation.
- As the candidate goes on with the presentation, you can send your queries in the chat box only.
- Participants are requested to maintain the decorum throughout the session.

# அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும் ஆய்வுச்சுருக்கம்

**அறிமுகம்.**

நுண்கலைகளின் பிறப்பிடமாக திகழ்கூடிய நாடு நம் இந்தியநாடு ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி செவ்வியல் கலை, கிராமியக் கலை என உள்ளது. இக்கலைகள் யாவும் பண்டைய காலத்தில் கோயில்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்து வந்துள்ளது. குறிப்பாக தமிழகத்தில் உள்ள ஆலயங்கள் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும் மன்னர்கள் பலரால் கட்டிட்ட கலைக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் பல தலங்கள் கட்டப்பட்டுள்ளன. இதில் சிவபெருமானின் தலங்கள் ஒரே பெயர் கொண்டு அழைக்கப்படும் இறைவனான தென்னாட்டுடை சிவன் பக்தி இலக்கியங்களில் நடனமம் செய்யவனாகப் பேசப்படுகின்றான்.

ஆவன் செய்த திருவிளையாடல்கள் பல. அவனுடைய செயல்கள் யாவும் நடனத்தின் வெளிப்பாடாகவே காட்டப்பட்டுள்ளன. புடைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐவகைத் தொழில் புரியும் அவன், உயிர்களிடத்து செலுத்தும் கருணையை, அறக்கருணை. முறக்கருணை என இரு வகைகளில் வெளிப்படுத்தினான். சிவன் வீறு கொண்டு எழுந்து மேற்கொண்ட அழிவுச் செயல்களும் நடனத்தின் வாயிலாகவே காடப்பட்டன. அவ்வாறு தென் தமிழகத்தில் அமைந்துள்ள எட்டு சிவாலயங்களில் பல்வேறு சம்ஹார நிகவுகள் நடைபெற்றுள்ளன. சிவனார். ஆடிய ஆடல்கள் அனைத்தும் அழவின் பொருட்டே என அனைத்து நூல்களும் சான்று பகர்ந்து அழிவின் பின் ஆக்கம் தோன்றும் என்று உறுதிபடுத்துகின்றன.

இவ்வாறு தொன்று தொட்டு சிவபிரானின் ஆட்டத்தையும், கூத்தையும் தமிழ் இலக்கியங்களும், பக்தி இலக்கியங்களும், நடன நூல்களும் வகுத்தும் தொடுத்தும் காட்டிள்ளன. இப்படி சிவபெருமான் ஆடிய ஆடல்களில் தென்னகக் கோயில்கள் எட்டில் மட்டும் அரக்கர்களையும், தன்னை வழிபடும் பக்தர்களுக்கு அருள்பாளிக்க வேண்டி எனனே ஆனாலும், பிற அசுரர்கள் ஆனாலும் அவர்களை அழிக்க தயங்கால் சம்ஹரித்து வெற்றிகளிப்பில் ஆடியதாகக் கூறப்படும் ஏட்டு வீரட்டங்களுக்கு உாயி பல செய்திகள் உள்ளன.

ஆடலோகும், இசையோடும் தொடர்புடைய அட்ட வீரட்டத் தலங்கள் பற்றியும், அங்கு காணக்கூடிய நாட்டிய செய்திகள் தாண்டவ செய்திகள், நாட்டியத்தில் அட்ட வீரட்ட தல நிகழ்வுகளின் பயன்பாடு போன்றவை இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளன. (இதன் பயனாக “அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கொயில்களும் நாட்டியத் தொடர்பும்” என்ற ஆய்வுத் தலைப்பில் சிறந்த பயனை நிறைவில் காண்பதே இந்த ஆய்வின் முதன்மையான நோக்கமாகும்.

**ஆய்வின் நோக்கம்:**

அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற இந்த ஆய்வின் நோக்கம், வரலாற்று பார்வையில் அட்ட வீரட்டத் தலங்களில் மன்னர்களின் பங்கு ஸ்தல வரலாறு, தேவார பதிகங்கள், நாட்டிய இசை உருப்படிகளின் பயன்பாடு, தலங்களில் கானக்கூடிய இசை நாட்டியச் சிற்பங்கள் மற்றும் செய்திகள், அட்ட தாண்டவம் அவற்றின் பிரையோக முறைகளை வெளிக் கொண்ர்வதே இந்த ஆய்வில் நோக்கமாகும்.

**ஆய்வு எல்லை:**

"அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற இவ்வாய்வானது இந்த எட்டு கோயில்களுக்கு உட்பட்ட வரலாற்றுத் தகவல்கள், ஸ்தலவரலாறு, இசை, நாட்டிய தரவுகள், தேவாரம், தொடர்புடைய சில பாடல்கள், நாட்டியச் சிற்பங்கள் போன்றவை மட்டுமே ஆய்வு எல்லைகளாகக் கொண்டு ஆழ்த்து ஆய்வுக்குட்படுத்துதல் ஆகும். இதனையே ஆய்வின் எல்லை அல்லது ஆய்வும் பரப்பாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வின் கருதுகோள்:**

"அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற ஆய்வு அட்ட வீரட்டத்தல புராண நிகழ்வுகள் நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் கையாளப்பட்டு வருவது என்ற கருதுகோள் இந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் ஆனுகுமுறை:**

"அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற ஆய்வு வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும் என்ற ஆய்வு வீரட்ட தலங்களின் வரலாற்றை விளக்குவதின் வாயிலாக விளக்கமுறை ஆய்வாகவும், வீரட்டத்தல இசை, நாட்டிய செய்திகளை தொகுப்பதின் அடிப்படையில் தொகுப்புமுறை ஆய்வாகவும், அட்ட வீரட்ட தல செய்திகளை இயல் வாரியாக பகுத்து ஆராய்வதன் வாயிலாக பகுப்பு முறை வீரட்டத்தல தேவாரம், ஆய்வில் கண்டறிந்த சில பாடல்களை செயல்முறை அடிப்படையில் ஆராய்வதன் வாயிலாக யெல்முறை ஆய்வாகவும், ஆய்வு தொடர்பான தகவல்களை சேகரிக்க நேரில் சென்று நேர்கானல் கண்டதின் அடிப்படையில் கள ஆய்வாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆய்வு முன்னோடிகள்:**

"அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற ஆய்விற்கு வீரட்டத்தல தொடர்புடைய நூல்கள் முதன்மை ஆதாரமாகவும், கள ஆய்வில் பெறபேட்டத்ரவுகள் துணைமை ஆதாரமாகவும் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுச் சிக்கல்:**

"அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற இந்த ஆய்வில் வீரட்டத்தலங்கள் அனைத்தும் மிகப்பழமையான கோவில்கள் என்பதால் காலவரையறை குறிப்பிட்ட இயலாமல் 'ஆய்வுச்சிக்கல்' ஏற்பட்டுள்ளது. எனவே தொடர்புடைய முக்கியமான தரவுகள் மட்டுமே இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வின் பயன்:**

"அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற இவ்வாய்வின் நிறைவில் தேவாரம், கௌத்துவம், சப்தம் போன்ற உருப்படிகள், புராண கதைகள் நாட்டியத்தில் கையாளப்படும் முறை, தாண்டவங்களின் விளக்கம் போன்றவை இசை, நாட்டியத் துறையினர் மேலும் அறிந்து மிகவும் பயன்பெறும் வகையில் ஆய்வு பயன் விளைந்தள்ளது. மேலும் பலா் பவ்வேறு கோணங்களில் ஆய்வினை மேற்கொள்ளும் வகையில் தூண்டுதலாகவும் அமைந்துள்ளது.

**ஆய்வேட்டின் கட்டமைப்பு:**

" அட்ட வீரட்டானேஸ்வரத் திருக்கோயில்களும் நாட்டியத் தொடர்பும்" என்ற இந்த ஆய்வானது, முன்னுரை, முடிவரை நீங்கலாக ஐந்து இயல்களாக பகுக்கப்பட்டுள்ளன.

**இயல் 1:** வரலாற்றுப் பார்வையில் அட்ட வீரட்ட தலங்கள்

**இயல் 2:** வீரட்டச் செயல்களும், தாண்டவமும்.

**இயல் 3:** அட்ட வீரட்ட தலங்கள் மீது அமைந்து பாடல்கள்

**இயல் 4:** வீரட்டத் தல இசை, நாட்டியச் செய்திகள்

**இயல் 5:** அட்ட தாண்டவமும், பிரையோகமும்

**இயல்கள் தோறும் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்புரை முடிவுகள், இறுதியில் நிறைவுரையாகத் தரப்பட்டுள்ளன மேலும் துணை நூற்பட்டியலும், பின்னிணைப்பும் தரப்பட்டுள்ளன.**

**இயல் 1** "வரலாற்றுப் பார்வையில் அட்ட வீரட்டத் தலங்கள்" என்ற முதலாவது இயலில் திருக்கண்டியூர், திருக்கோவிலூர், திருஅதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர் ஆகிய ஊர்கள் அமைவிடம், வீரட்டானம் பெயர்க்காரணம், கோயிலமைப்பு, வரலாற்றுப்பெருமை, தகவல்கள், பிறதகவல்கள், மன்னர்களின் பணி போன்ற தரவுகள் ஆகியவற்றினை ஆய்வுக்குட்படுத்தி இத்தித்தலங்களின் வரலாற்றினை வரலாற்றிமுறை அடிப்படையில் விளக்கப்பட்டள்ளன.

**இயல் 2** “வீரட்டச்செயல்களும், தாண்டவமும்” என்ற இரண்டாவது இயலில் அட்ட வீரட்ட தல வரலாறு அதாவது பிரம்மன் தலை கொய்தது, அந்தகன் வதம், திரியுர தகனம், தட்சயாகம் அழித்தது, சலந்திரனின் வதம், கஜசமஹாரம், காமனை எரித்தது, எமனை காலால் உதைத்தது என்ற புராண கதைகள், நடராஜ தத்துவம், தாண்டவம், லாஸ்யம், விளக்கம், மூவகை தாண்டவம், எழுவகை தாண்டவம், நவதாண்டவங்கள், பன்னிரு தாண்டவங்கள், அட்டதாண்டவங்கள் போன்றவை விரிவாக விளக்க முறை ஆய்வாக கொடுக்கப்பட்டள்ளன.

**இயல் 3** “அட்ட வீரட்த் தலங்கள் மீது அமைந்த பாடல்கள்” என்ற மூன்றாவது இயலில் அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர் ஆகியோர் இயற்றிய அட்டவீரட்டத் தல பதிகங்கள், நாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் கையாளக்கூடிய சில வாக்கேயக்காரர்களின் உருப்படிகளில் வீரட்டத்தல தொடர்பு, பிற இலக்கியங்களில் காணக்ககூடிய பாடல்களின் மேற்கோள்கள் போன்ற தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

**இயல் 4** “வீரட்டத்தல இசை, நாட்டியச் செய்திகள்” என்ற நான்காவது இயலில் அட்ட வீரட்டத்தலங்களில் தேவதாசிகளின் தொடர்பு, இசை, நாட்டியத் தொடர்புடைய சிறபங்களின் விளக்கம், கல்வெட்டுக்கள், திருக்கடையூரில் மாதவி-வாழ்ந்த தகவல்கள், வழுவூர் இராமையாபதள்ளை அவர்களின் நாட்டிய பங்களிப்பு என கள ஆய்வுத் தகவல்கள் விளக்கப்பட்டுள்ளன.

**இயல் 5** “அட்ட தாண்டவமும், பிரையோகமும்” என்ற ஐந்தாவது இயலில் 11 வகை ஆடல்களின் விளக்கம், அட்ட தாண்டவம் விளக்கம், பஞ்சமரபு, கூத்தநூல், ஆடவல்லான், நாட்டிய சாஸ்திரத்தில் தாண்ட விளக்கமும், ஒப்பீடும், நாட்டியத்தில் அட்ட தாண்டவங்களின் பிரையோக முறை, பிற நடன வடிவங்களில் அட்ட வீரட்டத் தல கதைகளின் பிரையோகம் போன்றசெய்திகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது.

**நிறைவுரை:**

இயல்கள்தோறும் கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் இயல் முடிவுகள் தொகுத்து தரப்பட்டுள்ளன இந்த தொகுப்புரையின் அடிப்படையில் நிறைவுரைப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

**சான்றாதாரங்கள்:**

இப்பகுதியில் ஒவ்வொரு இயலின் நிறைவிலும் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட வீரட்டத்தல தொடர்புடைய நூல்கள், நூலாசிரியர் பெயர், பக்க எண் முதலியவை சான்றாதாரங்கள் என்ற பெயரில் தரப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்:**

இவ்வாய்வின் உருவாக்கத்திற்கு துணைபுரிந்த நூல்கள் முதன்மை ஆதார நூல்கள், துணைமை ஆதார நூல்கள், பதிப்பகம், பதிப்பித்த இடம், வெளியான ஆண்டு, கள ஆய்வுத் தகவல்கள், ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்த ஆய்விற்கு துணைபுரிந்த கட்டுரைகள், இதழ்கள், ஆய்வு ஏடுகள், களஞ்சியம், போன்றவைகளும் அடங்கும் அகர வரிசைப்படி நூல்கள் வரிசைப்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன.

**பின்னிணைப்புகள்:**

கள ஆய்வில் எடுக்கப்பட்ட முக்கியமான புகைப்படங்கள், நாட்டிய சிற்பங்கள், கோவில் புகைப்படங்கள், ஓவியங்கள், இதர விபரங்கள் நேர்காணல், பாடல்களின் குறுந்தகடு முதலியவை பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ளன.